**<u>சுருக்கம்</u>**

**மகளிர் திட்டம் –2010–11ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்துதல், பணியாளர்கள், திட்ட செயல்பாடு மற்றும் முதலீட்டுச் செலவினங்கள், கண்காணிப்பு, சந்தைப்படுத்துதல், சுய உதவிக் குழுக்களுக்கான பதிவேடுகள் அச்சிட்டு வழங்குதல், மணிமேகலை விருதுகள் வழங்குதல், வங்கியாளர் விருதுகள் மற்றும் சுயஉதவிக்குழுக்களுக்கு சுழல் நிதி வழங்குதல் – செலவினம் ஒப்பளித்து ஆணை வெளியிடப்படுகிறது.**

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மஅதி3) துறை

அரசாணை (நிலை) எண்.50

நாள்: 19.05.2010
திருவள்ளுவர் ஆண்டு 2041
வைகாசி – 5
படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண். 89, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மஅதி3) துறை, நாள் 5.8..2009.
2. மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் நேர்முக கடித எண். 1124/டி1/2010, நாள் 5.5.2010.

**********

<u>ஆணை:-</u>

படிக்கப்பட்டவை ஒன்றில் உள்ள அரசாணையில், 2009–2010ம் ஆண்டில் மகளிர் திட்டத்தினை தொடர்ந்து செயல்படுத்தவும், அதன் பணியாளர்கள், திட்ட செயல்பாடு மற்றும் முதலீட்டுச் செலவினங்கள், கண்காணிப்பு, சந்தைப்படுத்துதல், சுய உதவிக் குழுக்களுக்கான பதிவேடுகள் அச்சிட்டு வழங்குதல், மணிமேகலை விருதுகள் வழங்குதல், வங்கியாளர் விருதுகள் மற்றும் சுயஉதவிக்குழுக்களுக்கு சுழல் நிதி வழங்குதல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு நிதி விடுவித்து ஆணையிடப்பட்டது.

2. படிக்கப்பட்டவை இரண்டில் உள்ள கடிதத்தில், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநர், மகளிர் திட்டத்தின் கீழ் 69.91 இலட்சம் மகளிரை உறுப்பினர்களாகக் கொண்டு 4.41 இலட்சம் சுய உதவிக் குழுக்கள் 31.3.2010 வரை உருவாக்கப்பட்டுள்ளன என்றும், 2010–11 ஆம் ஆண்டில் இந்நிறுவனம் சுய உதவிக் குழு இயக்கத்தை முனைப்புடன் செயல்படுத்த ஏழை, எளிய மற்றும் நலிவுற்ற பிரிவினரையும் உள்ளடக்கிய அனைத்துத் தரப்பு மகளிருக்கும் சம உரிமை மற்றும் சம வாய்ப்புகளை உருவாக்கித் தரும் வகையில் சுய உதவிக் குழு இயக்கத்தை முனைப்புடன் செயல்படுத்த உறுதி பூண்டுள்ளது எனவும், மாநிலத்தில் குழுக்கள் அமைக்கப்படாத சமூகத்தை சார்ந்த பிரிவு மற்றும் சுய உதவிக் குழுக்களில் இணையாமல் விடுபட்ட மகளிரை சேர்க்கவும், அவர்களது திறனை வளர்க்கவும் மற்றும் சமூக, பொருளாதார மேம்பாடு அடையவும்

வழிவகை செய்யப்படும் எனவும், இக்குறிக்கோள்களை அடையும் நோக்கத்துடன், 2010–11ஆம் ஆண்டில் மகளிர் திட்டத்தின் ஆண்டு செயல்திட்டம் மற்றும் நிதித் திட்டம் ஆகியவற்றைப் பின்வருமாறு அரசுக்கு அனுப்பியுள்ளார்.

| வ.எண். | விவரங்கள் | தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | பணியாளர்கள், திட்ட செயல்பாடு மற்றும் முதலீட்டு செலவினங்கள் | |
| அ | பணியாளர்கள் செலவினம் | 2087.94 |
| ஆ | திட்ட செயல்பாடு செலவினம் | 725.71 |
| இ | முதலீட்டு செலவினம் | 65.00 |
| II | கண்காணிப்பு செலவினம் | 1285.31 |
| III | சந்தைப்படுத்துதல் | 156.00 |
| IV | தகவல் தொடர்பு | 212.50 |
| V | சிறந்த சுய உதவிக் குழு/ஊராட்சி அளவிலான கூட்டமைப்புக்கு மணிமேகலை விருதுகள் | 100.20 |
| VI | வங்கியாளர் விருது | 27.15 |
| VII | நகர்ப்புற சுய உதவிக் குழுக்களுக்கு சுழல்நிதி | 2000.00 |
| | மொத்தம் | 6659.81 |

3. தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநர் 2010–11ஆம் ஆண்டில் 65,000 சுய உதவிக்குழுக்களுக்கு சுழல் நிதி வழங்கப்படும் என அரசு அறிவிப்பு செய்துள்ளது எனவும், நகர்ப்புறத்தில் 20,000 சுய உதவிக் குழுக்களுக்கு சுழல்நிதி வழங்க ரூ.20.00 கோடி மாநில நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது எனவும், மீதமுள்ள 45000 சுயஉதவிக்குழுகளுக்கு ஊரகப்பகுதிகளில் பொன்விழா கிராம சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் சுழல் நிதி வழங்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

**4.** தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநர் தனது கருத்துருவில் மகளிர் திட்டத்தில் குழு ஒருங்கிணைத்தல், பயிற்சி மற்றும் கடன் இணைப்பு ஆகியவை ஒன்றுக்கொன்று தொடர்புடையவை என்றும் அவை ஒரே நேரத்தில் செயல்படுத்தப்பட வேண்டியுள்ளதால் காலாண்டு முறைப்படி ஒதுக்கீடு செய்து வழங்கப்படும் தொகையை பயன்படுத்துவதில் காலதாமதம் ஏற்படுவதினால் திட்ட செயலாக்கத்தில் பாதிப்பு ஏற்படுமென்பதால், அரசு காலண்டு முறைப்படி ஒதுக்கீடு செய்து நிதி வழங்குவதில் இருந்து விலக்களிக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார். மேலும் அரசு முதன்மைச் செயலர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை அவர்கள், மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் அவர்களுடன் கலந்தாலோசித்து வழிகாட்டு நெறிமுறைகளை அவ்வப்போது நடைமுறையின் தேவைக்கு ஏற்றவாறு உரிய மாற்றம் செய்ய அதிகாரம் வழங்குமாறும் கேட்டுக் கொண்டுள்ளார். மேலும், மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் அவர்கள் **2010–2011–**ம் ஆண்டிற்கான செலவினத் தொகை **ரூ.6659.81** இலட்சத்தை அனுமதித்து விடுவிக்குமாறு அரசுக்குக் கருத்துரு அனுப்பியுள்ளார்.

**5.** தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநரது கருத்துருவினை அரசு மிகவும் கவனமுடன் பரிசீலித்து, அதனை ஏற்றுக் கொள்ளலாமென முடிவுசெய்து, பின்வருமாறு அரசு ஆணையிடுகிறது.

(i) 2010 -11ஆம் ஆண்டில் மகளிர் திட்டத்தின் மூலம் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளும் பொருட்டு மொத்த செலவினம் **ரூ.6659.81** இலட்சங்கள் (ரூபாய் அறுபத்தாறு கோடியே ஐம்பத்து ஒன்பது இலட்சத்து எண்பத்தோராயிரம் மட்டும்) அனுமதியளித்து அரசு ஆணையிடுகிறது.

(ii) மேலே (i) –ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட மொத்தத் தொகையில்,

a) திட்ட கண்காணிப்பு அலகுகள் மற்றும் திட்ட செயலாக்க அலகுகள் ஆகியவற்றுக்குத் தேவையானபணியாளர்கள், திட்ட செயல்பாடு மற்றும் முதலீட்டுச் செலவினங்களுக்காக **ரூ.2878.65** இலட்சங்கள் இணைப்பு **1–**ல் கண்டுள்ளவாறு பயன்படுத்தலாம்.

b) கண்காணிப்பு செலவினமாக அரசாணை (நிலை) )எண். **155**, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மஅதி3) துறை, நாள் **05.09.2007–**ல் வெளியிடப்பட்ட வழிமுறைகளுக்கிணங்க **ரூ.1285.31** இலட்சங்கள் இணைப்பு**–2**ல் கண்டுள்ளவாறு ஒப்பளிப்பு செய்யலாம். கடன் இணைப்பு பெறுவதற்காக தொண்டு நிறுவனங்களுக்கு வழங்கப்படும் ஊக்கத் தொகை பின்வரும் இனம் (iii)ல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இருத்தல் வேண்டும்.

c) இணைப்பு **3**ல் குறிப்பிட்டுள்ள விபரங்களின்படி **ரூ.156.00** இலட்சங்கள் சந்தைப்படுத்துதலுக்காகப் பயன்படுத்தலாம்.

d) தகவல் தொடர்பு மற்றும் கல்வி மற்றும் சுய உதவிக் குழுக்களுக்கு பதிவேடுகள் அச்சிடும் வகையில் இணைப்பு **4**ல் குறிப்பிட்டுள்ள விபரங்களின்படி **ரூ.212.50** இலட்சங்கள் பயன்படுத்தலாம்.

e) இணைப்பு 5ல் குறிப்பிட்டுள்ள விபரப்படி மணிமேகலை விருதுகள் வழங்கும் பொருட்டு ரூ.100.20 இலட்சங்கள் பயன்படுத்தலாம்.

f) வங்கியாளர் விருது வழங்குவதற்கு அரசாணை (நிலை) எண்.186, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மஅதி–3) துறை, நாள் 22.12.2008ல் குறிப்பிட்டுள்ள விதிமுறைகளின்படி, இணைப்பு 6ல் குறிப்பிட்டுள்ள விபரப்படி ரூ. 27.15 இலட்சங்கள் பயன்படுத்தலாம்.

g) நகர்ப்புற சுய உதவிக்குழுக்களுக்கு சுழல் நிதி வழங்கும் வகையில் ரூ.2000.00 இலட்சங்கள் பயன்படுத்தலாம்.

(iii) தொண்டு நிறுவனங்கள்/ ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் / சமுதாய அமைப்புகளுக்கும் கடன் இணைப்பு பெற வேண்டி, வழங்கப்பட வேண்டிய ஊக்கத் தொகையின் விபரம் பின்வருமாறு :-

a) உறுப்பினர் பயிற்சி, ஊக்குநர் மற்றும் பிரதிநிதி பயிற்சி முடிக்கப்பட்டதும், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் உறுப்பினராக இணைந்த குழுக்களுக்கு ரூ.300 வழங்கப்படும்.

b) ஒரு சுய உதவிக் குழு ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து 4 வருடங்களுக்குட்பட்ட சுய உதவிக் குழுக்களுக்கான கடன் இணைப்பில், வங்கிக் கடன் பகுதிக்கு மட்டும் ஊக்கத்தொகையாக முதல் கடன் இணைப்பிற்கு 0.5 விழுக்காடும், இரண்டாவது கடன் இணைப்பிற்கு 0.75 விழுக்காடும், மூன்றாவது மற்றும் அதற்கு மேலும் பெறப்படும் கடன் இணைப்பிற்கு 1 விழுக்காடும் ஊக்கத் தொகையாக வழங்கப்படும். தொண்டு நிறுவனங்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் சமுதாய அமைப்புகள் பெறும் அனைத்து கடன் இணைப்புகளுக்கும் எந்தவிதமான தடைகளுமின்றி ஊக்கத் தொகை 4 வருடங்களுக்கு வழங்கப்படும்.

c) குழுக்கள் பொருளாதார நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு அவைகளை ஊக்குவித்து தேவைக்கேற்ப இயந்திரங்கள், மூலப்பொருட்கள் ஆகியவற்றை கண்டறியவும் சந்தைப்படுத்துதல், ஆவணப்படுத்துதல் போன்றவற்றிற்கும் உறுதுணையாக இருக்கும் நிலையில் தொண்டு நிறுவனங்களுக்கு ஒரு குழுவிற்கு ரூ.2500/– வீதம் ஊக்கத் தொகை வழங்கப்படும். அவ்வாறு மேற்கொள்ளும் தொழிலுக்கான திட்ட மதிப்பீடு ரூ.1.5 இலட்சத்திற்கு மேல் இருக்க வேண்டும்.

d) பொருளாதார நடவடிக்கையில் ஈடுபடும் சுய உதவிக்குழுக்களுக்கு தொடர்ந்து உறுதுணையாக இருக்கும் தொண்டு நிறுவனங்களுக்கு, தொண்டு நிறுவனங்கள் ஆற்றிய சேவைக்கான சுய உதவிக் குழுக்களின் சான்றிதழ் அளித்தல், பொருளாதாரக் கடனை 12 மாதத் தவணையில் தொடர்ந்து நிலுவையில்லாமல் செலுத்தியது மற்றும் பொருளாதார நடவடிக்கைக்கான ஆவணங்கள் மற்றும் இதர அறிக்கைகள் தயாரித்தல் போன்ற நிபந்தனைகளுக்குட்பட்டு மேலே (c)–ல் குறிப்பிட்டுள்ள தொகைரூ.2500 வழங்கப்படும்

(iv) 20,000 நகர்ப்புற சுய உதவிக்குழுக்களுக்கு சுழல் நிதி வழங்க ரூ.20.00 கோடிகள் (ரூபாய் இருபது கோடிகள் மட்டும்) 2010–11ம் ஆண்டு வரவு செலவு ஒதுக்கீட்டிலிருந்து தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் செலவழித்துக் கொள்ள அனுமதி வழங்கியும்,

(V) மேலே (i)ல் அனுமதிக்கப்பட்ட மொத்த செலவினம் ரூ.**6659.81** இலட்சத்தில் முதல் கட்டமாக **50** விழுக்காடு ரூ.**3329.90** இலட்சங்கள் (ரூபாய் முப்பத்து மூன்று கோடியே இருபத்து ஒன்பது இலட்சத்து தொன்னூறு ஆயிரம் மட்டும்) விடுவித்தும் அத்தொகையை காலாண்டு முறைப்படி நிதி ஒதுக்கீடு செய்வதில் இருந்து விலக்களித்தும் அரசு ஆணையிடுகிறது.

(Vi) அரசு முதன்மைச் செயலர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அவர்கள், மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் அவர்களுடன் கலந்தாலோசித்து வரைமுறைகளில் அவ்வப்போது நடைமுறையின் தேவைக்கு ஏற்றவாறு உரிய மாற்றம் செய்ய அதிகாரம் வழங்கியும், தேவைப்படின் மகளிர் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகளை மறு ஒதுக்கீடு செய்யவும் அதிகாரமளித்து அரசு ஆணையிடுகிறது.

**6(a)** மேலே பத்தி 5(V)ல் விடுவிக்கப்பட்ட ரூ.**3329.90** இலட்சத்தில், ரூ.**2663.92** இலட்சம் (ரூபாய் இருபத்தாறு கோடியே அறுபத்து மூன்று இலட்சத்து தொன்னூற்று இரண்டாயிரம் மட்டும்) கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

(ரூபாய் இலட்சத்தில்)

| | |
|---|---|
| ‘‘**2235** – சமூக பாதுகாப்பும், நலனும் **– 02** சமூக நலன் **103–** மகளிர் நலன் **–** பதினொன்றாம் ஐந்தாண்டின் திட்டப் பணிகள் II மாநிலத் திட்டம் LC – தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டம் (மகளிர் திட்டம்)–11 மானியங்கள் – **02** பொதுவான மானியம் (DPC – 2235 – 02-103 – LC - 1123) | **2663.92** |

**6**(b) மீதமுள்ள ரூ.**665.98** இலட்சம் (ரூபாய் ஆறுகோடியே அறுபத்தைந்து இலட்சத்து தொன்னூற்று எட்டாயிரம் மட்டும்) கீழ்கண்ட கணக்கு தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

( ரூபாய் இலட்சத்தில்)

| | |
|---|---|
| ‘‘**2235** – சமூக பாதுகாப்பும், நலனும் **– 02** சமூக நலன் **789–** ஆதி திராவிடருக்கான சிறப்புக் கூறுகள் திட்டம் – பதினொன்றாம் ஐந்தாண்டின் திட்டப் பணிகள் II மாநிலத் திட்டம் JD – சிறப்புக் கூறுகள் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டம் (மகளிர் திட்டம்) –11 மானியங்கள் – **02** பொதுவான மானியம் (DPC – 2235 – 02-789 – JD -1121) | **665.98** |

**7.** மேலே பத்தி எண் **5**(V)**–**ல் விடுவிக்கப்பட்ட தொகையினை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஆணையர் பெற்று, தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்திற்கு, காசோலையாக வழங்க அதிகாரம் வழங்கி அரசு ஆணையிடுகிறது. இதற்கான பயன்பாட்டுச் சான்றிதழை மாநிலக் கணக்காயர் / ஆணையர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை மற்றும் அரசிற்கு வழங்குமாறு தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. இவ்வாணை நிதித்துறை அ.சா.கு.எண்.337/செயலர் (செலவினம்)/2010, நாள் 14.05.2010ல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க.அஷோக் வர்தன் ஷெட்டி
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம், சென்னை 32.
ஆணையர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, சென்னை 15.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள், ()
அனைத்து திட்ட அலுவலர்கள், ()
(மகளிர் திட்டம்) ()
(மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் மூலமாக)
மாநிலக் கணக்காயர், சென்னை 18.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை 35.
நகல்:–
மாண்புமிகு துணை முதலமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை 9.
நிதி (ஊரக வளர்ச்சி)த்துறை, சென்னை 9.
அரசு முதன்மைச் செயலர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்
துறையின் தனிச் செயலர், சென்னை 9.
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (வரவு (ம) செலவு)துறை, சென்னை 9.
புள்ளியியல் ஆய்வாளர் / ஊரக வளர்ச்சி மற்றும்
ஊராட்சி (மாஅதி–1) துறை, சென்னை –9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

## இணைப்பு – 1

### பணியாளர்கள், திட்ட செயல்பாடு மற்றும் முதலீட்டுச் செலவினங்கள்

| வ. எண் | விபரங்கள் | தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| **1** | **பணியாளர் செலவினம்** | |
| ஆ | திட்ட மேலாண்மை அலகு | **328.52** |
| ஆ | **32** திட்ட செயலாக்க அலகுகள் | **1669.48** |
| இ | ஊதியக்குழு நிலுவை மூன்றில் ஒருபங்கு **2010–11** ஆம் ஆண்டில் வழங்குவதற்காக | **89.94** |
| | **உபமொத்தம்** | **2087.94** |
| **2** | **செயல்பாட்டுச் செலவினம்** | |
| | திட்ட மேலாண்மை அலகு (போக்குவரத்து செலவினம்/பஞ்சப்படி, எரிபொருள், வாடகை, மின்சாரம் மற்றும் இதர செலவினங்கள்) | **170.14** |
| | திட்ட செயலாக்க அலகு(போக்குவரத்து செலவினம்/பஞ்சப்படி, எரிபொருள், வாடகை, மின்சாரம் மற்றும் இதர செலவினங்கள் | **555.57** |
| | **உபமொத்தம்** | **725.71** |
| **3** | **முதலீட்டு செலவினம் (திட்ட மேலாண்மை அலகு மற்றும் திட்ட செயலாக்க அலகு)** | |
| | **10** திட்ட செயலாக்க அலகிற்கு பழைய வாகனங்களைநீக்கி விட்டு புதிய வாகனங்கள் வாங்க | **50.00** |
| | திட்ட மேலாண்மை அலகு மற்றும் திட்ட செயலாக்க அலகுக்கு தேவையான கணினிகள் மற்றும் மென்பொருள்கள் | **15.00** |
| | **உபமொத்தம்** | **65.00** |
| | **கூடுதல் மொத்தம்** | **2878.65** |

க.அஷோக் வர்தன் ஷெட்டி
அரசு முதன்மைச் செயலாளர்.

// உண்மை நகல் //

பிரிவு அலுவலர்.

## இணைப்பு – 2

## கண்காணிப்புச் செலவினங்கள்

| வ.எண் | பொருள் | தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | கடன் இணைப்புக்கான ஊக்கத் தொகை | |
| | அ) முதல் கடன் இணைப்பு – ஊக்கத் தொகை @0.5% எதிர்பார்க்கப்படும் வங்கிக் கடன் மதிப்பு –ரூ.250 கோடி முதல் இணைப்புக்கான ஊக்கத் தொகை (ரூ.250 கோடி x 0.5% ) | 125.00 |
| | ஆ) இரண்டாவது கடன் இணைப்பு – ஊக்கத் தொகை @ 0.75% எதிர்பார்க்கப்படும் வங்கிக் கடன் மதிப்பு– ரூ.1200 கோடி இரண்டாவது இணைப்புக்கான ஊக்கத் தொகை (ரூ1200 கோடி x 0.75%) | 900.00 |
| | இ) மூன்றாவது மற்றும் கூடுதல் கடன் இணைப்பு – ஊக்கத் தொகை @ 1 % எதிர்பார்க்கப்படும் வங்கி கடன் மதிப்பு – ரூ.413.75 கோடி மூன்றாவது மற்றும் கூடுதல் கடன் இணைப்பு – ஊக்கத் தொகை (ரூ.413.75 கோடி x 1%) | 413.75 |
| 2. | அ) பொருளாதார செயல்பாட்டுக்கான ஊக்கத் தொகை (ரூ..2500 x 3000 சுய உதவி குழுக்கள்) | 75.00 |
| | ஆ) 2010–11 ஆம் ஆண்டிற்கான கடன் இணைப்பு ஊக்கத்தொகை மற்றும் பொருளாதார செயல்பாடுகளுக்கான ஊக்கத் தொகை மொத்தம் (I + II) | 1513.75 |
| | இ) எதிர்பார்க்கப்படும் கடன் இணைப்பு ஊக்கத் தொகை ரூ.1513.75 இலட்சத்தில் 75% | 1135.31 |
| 3. | புதிய குழுக்களுக்கான முதல் வருட கண்காணிப்புத் தொகை @ ரூ.300 x 50,000 குழுக்கள் | 150.00 |
| | கூடுதல் மொத்தம் (2இ + 3) | 1285.31 |

க.அஷோக் வர்தன் ஷெட்டி
அரசு முதன்மைச் செயலாளர்.

// உண்மை நகல் //

பிரிவு அலுவலர்.

## இணைப்பு – 3

## சந்தைப்படுத்துதல் (செலவினங்கள்)

| வ. எண். | விவரம் | மொத்தம் (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | மாநில / தேசிய அளவிலான பொருட்காட்சி நடத்துதல் மற்றும் பங்கேற்பு | 50.00 |
| 2 | மாநில / தேசிய அளவிலான பொருட்காட்சிகளில் 32 மாவட்டங்களிலிருந்து சுய உதவிக் குழுக்கள் பங்கேற்பிற்கான போக்குவரத்து மற்றும் படிகள்ஒரு மாவட்டத்திற்கு ரூ.1 இலட்சம் வீதம் | 32.00 |
| 3 | மாவட்டம்/வட்டார அளவில் பொருட்காட்சி | 64.00 |
| 4 | மண்டல அளவிலான பொருட்காட்சி | 10.00 |
| | **மொத்தம்** | **156.00** |

க.அஷோக் வர்தன் ஷெட்டி
அரசு முதன்மைச் செயலாளர்.

// உண்மை நகல் //

பிரிவு அலுவலர்.

## இணைப்பு – 4

## தகவல் தொடர்புச்செலவினங்கள்

| வ.எண் | பொருள் | தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | சுய உதவிக் குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் பதிவேடுகள் அச்சிடுதல் | 135.00 |
| 2 | தகவல் கல்வி மற்றும் IEC நடவடிக்கைகள் | 77.50 |
| | **மொத்தம்** | **212.50** |

க.அஷோக் வர்தன் ஷெட்டி
அரசு முதன்மைச் செயலாளர்.

// உண்மை நகல் //

பிரிவு அலுவலர்.

## இணைப்பு – 5

## சிறந்த சுய உதவிக்குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கான

## மணிமேகலை விருதுகள்

## வழங்கத் தேவையான செலவினங்கள் விபரம்

| வ.எண் | விபரங்கள் | தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | ரூ. 3,00,000/– வீதம் சிறந்த 5 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு மாநில விருதுகள் | 15.00 |
| 2 | ரூ. 1,00,000/– வீதம் சிறந்த10 சுய உதவிக் குழுக்களுக்கு மாநில விருதுகள் | 10.00 |
| 3 | ரூ. 1,00,000/– வீதம் சிறந்த ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு மாவட்டந்தோறும் 1 விருது | 31.00 |
| 4 | மாவட்ட அளவில் சிறந்த 3 சுய உதவிக் குழுக்களுக்கு ரூ. 25,000/– வீதம் 3 விருதுகள் | 24.00 |
| 5 | சான்றிதழ் தயாரிக்க மற்றும் விருதுகள் வழங்கும் விழா ஏற்பாடுகள் செய்ய | 20.20 |
| | மொத்தம் | 100.20 |

க.அஷோக் வர்தன் ஷெட்டி
அரசு முதன்மைச் செயலாளர்.

// உண்மை நகல் //

பிரிவு அலுவலர்.

## இணைப்பு – 6

## வங்கியாளர் விருதுகள் செலவின விபரம்

| வ.எண் | பொருள் | தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| | சிறந்த சேவைபுரிந்த வங்கி/ வங்கிக் கிளைகள் விருது – 2010–2011. | |
| 1. | மாநில அளவில் | |
| | அ) 3 சிறந்த சேவைபுரிந்த வங்கி விருது@ ரூ.15,000 பாராட்டு சான்றிதழுடன் கூடிய விருது | 0.45 |
| | ஆ) 2 சிறந்த சேவைப்புரிந்த சுய உதவிக் குழுக்கள்/ மகளிர் தொழில் முனைவோருக்கான சிறப்பு வங்கிக் கிளை பிரிவுக்கான விருதுகள் | |
| | முதல் விருது – ரொக்க விருது | 1.00 |
| | இரண்டாவது விருது – ரொக்க விருது | 0.75 |
| | இ) 3 சிறந்த சேவைப்புரிந்த பிற பிரிவு வங்கிக் கிளைகளுக்கான விருதுகள் | |
| | முதல் விருது – ரொக்க விருது | 1.00 |
| | இரண்டாவது விருது – ரொக்க விருது | 0.75 |
| | மூன்றாவது விருது – ரொக்க விருது | 0.50 |
| | ஈ) மாநில அளவில் விருதுகள் வழங்கும் விழா ஏற்பாடுகள் செய்ய | 2.85 |
| | மாநில அளவிலான விருதுகள் மொத்தம் (1 அ முதல் ஈ வரை) | 7.30 |
| 2. | மாவட்ட அளவில் | |
| | அ) 1 சிறந்த சேவைபுரிந்த வங்கி விருது ஒரு மாவட்டத்திற்கு ரூ.15,000 வீதம் 32 மாவட்டங்களுக்கு | 4.80 |
| | ஆ) 200 கிளைகளுக்கு மேற்பட்ட 15 மாவட்டங்களுக்கு 2 விருது @ ரூ.15,000 வீதம் 15 மாவட்டங்களுக்கு | 2.25 |
| | இ) 3 சிறந்த சேவைப்புரிந்த பிற பிரிவு வங்கிக் கிளைகளுக்கான விருதுகள் | |
| | முதல் விருது – ரொக்க விருது (ரூ.15,000 வீதம் 32 மாவட்டங்களுக்கு) | 4.80 |
| | இரண்டாவது விருது – ரொக்க விருது(ரூ.10,000 வீதம் 32 மாவட்டங்களுக்கு) | 3.20 |
| | மூன்றாவது விருது – ரொக்க விருது (ரூ.5,000 வீதம் 32 மாவட்டங்களுக்கு) | 1.60 |
| | ஈ) மாவட்ட அளவில் விருதுகள் வழங்கும் விழா ஏற்பாடுகள் செய்ய (ரூ.10,000 வீதம் 32 மாவட்டங்களுக்கு) | 3.20 |
| | மாவட்ட அளவிலான விருதுகள் மொத்தம் (2 அ முதல் ஈ வரை) | 19.85 |
| | மாநில மற்றும் மாவட்ட அளவிலான விருதுகளின் கூடுதல் மொத்தம் | 27.15 |

க.அஷோக் வர்தன் ஷெட்டி
அரசு முதன்மைச் செயலாளர்.

// உண்மை நகல் //

பிரிவு அலுவலர்.